**STC No.576/2019**
**Date 01.06.2023**
**PW : 1**
**பெயர் - திரு. அருணாச்சலம் த/பெ.**
**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

தளபதிசமுத்திரம் தவிர வேறு எந்த ஊரிலும் எனக்கு வீடுகள் கிடையாது. தளபதிசமுத்திரம் ஊரானது வள்ளியூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு உட்பட்டது. 2018 ஆம் ஆண்டு காலகட்டத்தில் எதாவது நிலம் வாங்கினர்களா என்றால் நிலம் வாங்கினேன் 2018 க்கு முன்னரா பின்னரா என்று ஞாபகமில்லை. 2018 ஆம் ஆண்டு காலகட்டத்தில் எனக்கு சொந்தமான எந்த நிலத்தையும் நான் விற்கவில்லை. 2018 ஆம் ஆண்டுக்கு முன்னர் நான் எதாவது நிலம் வாங்கினேனா என்றால் வாங்கினேன் 3 1/2 ஏக்கர் வாங்கியுள்ளேன் ஆனால் தேதி ஞாபகமில்லை. அதற்கான ஆவணங்கள் வைத்துள்ளேன் பதிவுதுறை ஆவணத்திலும் துலங்கும். மேற்படி நிலங்களை என் பெயரில் தான் வாங்கினேன்.

மேற்படி 3 1/2 ஏக்கர் நிலத்தை நான் யாரிடமும் விற்கவில்லை. நான் 3 1/2 ஏக்கர் நிலத்தை நான் வாங்கி விற்கவில்லை என்பதால் நிலத்தை வாங்கி விற்பனை செய்யும் தொழில் இல்லை என்றால் சரிதான். மேற்படி 3 1/2 ஏக்கர் நிலத்தில் என்ன வகையான பயிர் செய்து வந்துள்ளேன் என்பதற்கு நான் அடங்கல் வைத்துள்ளேனா என்றால் வைத்துள்ளேன். எத்தனை வருடம் அடங்கல் வைத்துள்ளேன் என தற்போது ஞாபகமில்லை. மேற்படி அடங்கிலை பார்த்தால் அந்தந்த காலகட்டத்தில் என்னென்ன பயிர் செய்துவந்தேன் என்று அறிய முடியும் என்றால் சரிதான்.

நான் வங்கி கணக்கை கனரா வங்கி வள்ளியூர் கிளையில் வைத்துள்ளேன். 2018 காலகட்டத்திலிருந்து தற்போது வரை மேற்படி கனரா வங்கி தவிர தளபதிசமுத்திரம், நான்குநேரி கூட்டுறவு வங்கி கிளையிலும், பாண்டியன் கிராம வங்கி வள்ளியூர், தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கி வள்ளியூரில் வங்கி கணக்கு வைத்துள்ளேன். மத்திய, மாநில அரசிடமிருந்து பயிர் விளைச்சல் இல்லாத போது தரப்படும் மானியம் கனரா வங்கி வள்ளியூர் கிளையில் தான் வரவு வைக்கப்படும்.

2018 ஆம் ஆண்டுக்கு முன்னர் விளைச்சல் இல்லை என்று மானியம் வாங்கி உள்ளிர்களா என்றால் வாங்கி உள்ளேன். 2018 காலகட்டத்தில் இருக்கும். எந்த ஆண்டு என்று வங்கி கணக்கு புத்தகத்தை பார்த்தால் தெரியவரும் என்றால் சரிதான். மேற்படி வங்கி கணக்கிற்கு அனைத்திலும் எனது ஆதார், கைபேசி எண் மற்றும் பேன் கார்டு இணைத்துள்ளேன் என்றால் சரிதான். வருமானவரி கணக்கு இதுவரை தாக்கல் செய்தது இல்லை.

பொதுவாக ரூ.20,000/- க்கு மேல் ஒருவருக்கு கொடுக்க வேண்டுமென்றால் வங்கி காசோலை, வரவோலை, வங்கி டிஜிட்டல் பரிமாற்றம் மூலம் தான் செய்ய வேண்டும் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியும். எனது ஊரான தளபதிசமுத்திரம் தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள ஊர் என்றால் சரிதான். வாடகை ஆட்டோ, தொட்டி ஆட்டோ மற்றும் வாடகைக்காக பயன்படுத்தபடும் வாகனங்களை எங்கள் ஊரில் உள்ள நபர்கள் வைத்துள்ளார்கள் என்றால் சரிதான்.

எதிரியின் கணவர் பெயர் வேளாங்கன்னி சேகர் என்பவர் தெற்கு கள்ளிகுளம் ஆட்டோ ஸ்டாண்டை சார்ந்தவர். அவர் எனக்கு உறவினர் இல்லை. தெற்கு கள்ளிகுளத்தில் எனக்கு உறவினரும் இல்லை. எதிரியின் வீட்டிற்கு நான் சென்றதும் இல்லை. பணபரிவர்த்தனை நடந்த சமார் 4வருடத்திற்கு முன்னர் எதிரியின் கணவர் வேளாங்கன்னி சேகர் என்பவரை தெரியும். மேற்படி எதிரியின் கணவர் எனது தோட்டத்திலிருந்து காய்கறிகளை சந்தைக்கு எடுத்து செல்வது மூலம் எனக்கு பழக்கம் ஏற்பட்டது.

மேற்படி எதிரியின் கணவர் சொந்த ஆட்டோ வைத்துள்ளார். எதிரியின் கணவரிடம் சொந்த ஆட்டோவை கிடையாது அவர் ஆட்டோ ஓட்டுனர் இல்லையென்றும் 2018 க்கு முன்பாக வெகுவருடங்களாகவே மூளை செயல்பாட்டில் பிரச்சனை இருந்த காரணத்தினால் சிகிச்சையிலிருந்தார் என்றும் 2017 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் மூளையில் இரத்த கசிவு ஏற்பட்டு அதனால் அவருடைய கை, கால்கள் இயல்பாக செயல் பட முடியாமால் இன்று வரை அதற்காக சிகிச்சை எடுத்து வருகிறார் என்ற விபரம் தெரியுமா என்றால் அவருக்கு என்ன உடல்நிலை பிரச்சனை என்று தெரியாது ஆனால் வாகனத்தின் மூலம் சந்தைக்கு எடுத்து செல்வார்.

எதிரியின் கணவருக்கு மூளையில் பிரச்சனை இருந்த காரணத்தினால் பார்வை குறைபாடு, கை,கால் செயல்திறன் குறைபாடு காரணத்தினால் அவரால் வாகனத்தை இயக்க இயலாது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நீங்கள் அனுப்பிய ம.ச.ஆ.3 அறிவிப்பில் எதிரி ரூ. 9 லட்சம் கடன் வாங்கியதாக எங்கும் குறிப்பிடவில்லை என்றால் அவர் அளித்த காசோலை மட்டும் என்னிடம் உள்ளது என்பது மட்டும் தான் தெரியும். நீங்கள் அனுப்பிய ம.ச.ஆ.3 அறிவிப்பில் எதிரிக்கு எங்கு வைத்து, யார் முன்னிலையில், எந்த தேதியில் பணம் அளிக்கப்பட்டது என்ற விபரம் குறிப்பிட்டு தெரிவிக்கவில்லை என்றால் சரிதான்.

எனது ஊரிலிருந்து தெற்கு கள்ளிகுளம் 20, 25 கி.மீ தூரம் இருக்கும் என்றால் பிரதான சாலையின் மூலம் வந்தால் எவ்வளவு என்று தெரியாது குறுக்கு வழியாக வந்தால் 10, 12 கி.மீ தூரம் தான் இருக்கும். 20.12.2018 ஆம் தேதி எதிரி என்னை வீட்டில் வந்து சந்தித்து பணம் தேவை படுவதாகவும் 2 மாதம் கழித்து திருப்பி தருவதாகவும் தெரிவித்த போது தான் எனக்கு தெரியும் என்றால் அதற்கு முன்னராகவே எதிரியின் கணவர் எனக்கு பணத்தை குறித்து கேட்டுள்ளார். 20.12.2018 ஆம் தேதிக்கு முன்னர் எதிரியின் கணவர் பணம் கேட்ட விபரத்தை அறிவிப்பிலோ, புகார் மனுவிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ நான் குறிப்பிட்டு தெரிவிக்கவில்லை என்றால் சரிதான்.

2012.2018 ஆம் ஆண்டு காலகட்டத்தில் என் வீட்டில் என்னுடன் வசித்து வந்தார்கள் என்றால் நானும், எனது மனைவி, மகனுடன் வசித்து வந்தேன் பணம் கொடுக்கும் போது எனது மகன் பள்ளிக்கு சென்றுவிட்டான். எனது மகளை உள்ளூரில் திருமணம் செய்து கொடுத்துவிட்டேன். 2018 ஆம் ஆண்டு காலத்தில் எனது மகன் தெற்கு கள்ளிகுளத்தில் ஓ.எல்.எஸ் பள்ளியில் படித்து கொண்டிருந்தார். பள்ளிக்கு பள்ளி பேருந்தில் சென்று வருவார்.

உங்கள் மகன் ஓ.எல்.எஸ் பள்ளியில் படித்ததால் தெற்கு கள்ளிகுளத்தை சார்ந்த ஆட்டு வியாபாரி சேவியர் எனக்கு பழக்கம் என்றால் சரிதான் அவர் தோட்டம் கள்ளிகுளத்தில் உள்ள எனது தோட்டத்திற்கு அருகில் உள்ளது. கள்ளிகுளத்தில் உள்ள தோட்டம் எனது பெயரில் உள்ளது அதற்கான ஆவணமும் உள்ளது. எதிரியின் கணவர் பணம் வாங்க வீட்டிற்கு காலை சுமார் 09.00, 09.45 மணிக்கு மேல் வந்தார்கள். சாட்சி மீண்டும் நேரம் ஞாபகமில்லை 08.00 மணி என்று கூறுகிறார்.

எத்தனை மணிக்கு பணம் வாங்கினார் என்ற விபரத்தை அறிவிப்பிலோ, புகார் மனுவிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ நான் குறிப்பிட்டு தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். மனுவிலும், அறிவிப்பிலும் நீங்கள் சொல்வது போல் எதிரி பழக்கம் உள்ளவர் கிடையாது என்றும், எதிரிக்கும், எதிரியின் கணவருக்கும் நீங்கள் யார் என்று தெரியாது என்றால் சரியல்ல தெரியும். 20.12.2018 ஆம் தேதி எதிரி தெற்கு கள்ளிகுளம் காமராஜர் நடுநிலைப்பள்ளியில் தலைமையாசிரியராக பணி செய்து வந்தார் என்றாலும் அன்றைய தினம் தலைமையாசிரியர் என்ற நிலையில் இருந்ததால் காலை 08.00 மணி முதல் அன்று நாள் முழுவதும் 05.00 மணி வரை பணியில் பள்ளியில் தான் இருந்தார் என்றால் சரியல்ல 08.00 மணிக்கு பணம் வாங்க

எனது வீட்டிற்கு வந்தார்.

எதிரி அவர் குடும்ப தேவைக்காக கள்ளிகுளத்தை சார்ந்த ராஜன் மனைவி மரியகலா என்பவரிடம் பணம் பெற்றிருந்தார் அதற்கு செக்கியூரிட்டியாக இவ்வழக்கில் குறிப்பிட்டுள்ள ம.சா.ஆ.1 மற்றும் இன்னொரு காசோலையும் வழங்கியிருந்தார் என்றும் அந்த மரியகலா எதிரியிடமிருந்து கடன் தொகை முழுவதையும் பெற்று கொண்டு கூடுதல் வட்டிக்காக எதிரியை அச்சுறுத்தி பணம் பறிக்க முயற்சி செய்தார், எதிரி அது தொடர்பாக வள்ளியூர் காவல்நிலையத்தில் புகார் செய்து அவர் விசாரணை நிலுவையிலிருக்கும் போது மேற்படி மரியகலா அவருடைய மைத்துனர் ஆட்டு வியாபாரி சேவியர் மூலமாக உங்களிடம் ம.சா.ஆ.1 யை ஒப்படைத்து எதிரியை மோசடி செய்யும் நோக்கில் மரிய கலா மற்றும் ஆட்டு வியாபாரி சேவியர் தூண்டுதலின் அடிப்படையில் நீங்கள் ம.சா.ஆ.1 காசோலையை நிரப்பி எனது வங்கி கிளை கனரா வங்கியில் பண வசூலுக்காக செலுத்தினேன் என்றால் சரியல்ல.

வள்ளியூர் காவல்நிலையத்திலும்,வள்ளியூர் உதவி கண்காணிப்பாளர் அலுவலகத்தில் என்னையும் மரிய கலாவைும் அழைத்து விசாரணை செய்தார்கள் என்றால் இல்லை. ம.சா.ஆ.1 கையெழுத்தில் வேறுபாடு உள்ளதாக ம.சா.ஆ.2 பெற்றவுடன் எதிரியின் கணவரிடம் புதியதாக காசோலை கேட்டோ, பணத்தை கேட்டோ எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்றால் சரிதான். நீங்கள் எதிரியிடமிருந்து பணம் பெறுவதற்கோ, மாற்றுமுறை ஆவண சட்டத்தின் கீழ் எதிரியின் வழக்கு தொடர்வதற்கோ, பரிகாரம் பெறுவதற்கோ எந்த முகாந்திரம் கிடையாது என்றும், எனக்கும் எதிரிக்கும் இடையே சட்டத்தால் வலியுறுத்தகூடிய எந்த பண பரிவர்த்தனையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

2018 காலகட்டத்தில் நீங்கள் குறிப்பிட்டுள்ள மேற்படி வங்கியில் உள்ள வங்கி கணக்கில் பண இருப்பு இருந்தது என்பதை நிரூபணம் செய்ய ஆவணம் தாக்கல் செய்ய முடியுமா என்றால் வங்கியின் கணக்கை பார்த்தால் தெரியும். மேற்படி வங்கி கணக்கிலிருந்த இருப்பை குறித்து வங்கியிலிருந்து பரிவர்த்தனைகளை தாக்கல் செய்ய முடியும். மேற்படி 2018 காலகட்டத்தில் எனக்கு வந்த வருமானத்தை நீதிமன்றத்தில் ஆவணமாக தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியாது.

ரூ.9 லட்சம் பணம் வங்கியிலிருந்து தொகுக்கப்பட்டு, வழங்கபட்ட பணம் இல்லை என்றால் சரிதான். ரூ.9 லட்சம் பணத்தை நானே ரப்பர் பேண்டால் போட்டது. மேற்படி ரூ.9 லட்சம் பணத்தில் ரூ.100, ரூ. 200, ரூ.500, ரூ.2000 என்ற தாள்கள் வகைபாட்டில் இருந்தது. அதில் ரூ.500 ம், ரூ.2000 நோட்டும் சரிபாதியாக மொத்த பணத்தில் சுமார் ரூ.7 லட்சம் இருந்திருக்கலாம். ரூ. 9 லட்சத்தை நானும் எனது மனைவியும் எண்ணி எதிரியிடம் கொடுத்தோம். எதிரியும் வாங்கி எண்ணினார். மேற்படி பணம் வாங்கி எண்ணி காசோலை கொடுக்க சுமார் எவ்வளவு நேரம் எடுத்திருக்கும் என்றால் அரை மணி நேரத்திற்குள் முடிந்திருக்கும். எங்களிடம் பணம் எண்ணுவதற்கு மிஷின் கிடையாது கையால் தான் எண்ணினோம். பணம் வாங்கியதாக சொல்லப்படும் எதிரியும் பணத்தை கையால் தான் எண்ணினார்.

உங்கள் மனுவிலும், அறிவிப்பிலும், முதல்விசாரணையிலும் கூறிய விபரங்கள் உண்மைக்கு புறம்பானது என்றும் முதல்விசாரணையில் தெரிவித்த விபரங்கள் போல எதிரியின் கணவர் ஆட்டோ ஓட்டிவந்தார் என்பதும் அதன்மூலமாக உங்களுக்கு அறிமுகம் என்று சொல்லி உள்ளதும் 20.12.2018 ஆம் தேதி எதிரி அவசர பண்டிகை செலவிற்காகவும், மகள் திருமண கடனை அடைப்பதற்காகவும் பணம் தேவை இருப்பதாக சொல்லி என் வீட்டில் வைத்து ரூ.9 லட்சம் பணமாக கடன் பெற்றார் என்று கூறியுள்ளதும், அன்றைய தினமே ஏற்கனவே பூர்த்தி செய்து கொண்டு வந்திருந்த காசோலை கொண்டு வந்ததாகவும், அதில்

கையெழுத்துயிட்டு என்னிடம் அளித்தாகவும், 2 மாதத்தில் பணத்தை திரும்ப தந்து விடுவதாக உங்களிடம் சொன்னதாகவும் நீங்கள் சொல்லி உள்ள சங்கதிகள் அனைத்து உண்மை இல்லை என்றால் சரியல்ல.

காசோலையில் உள்ள நிரப்பபட்ட பெயர், தொகை மற்றும் கையெழுத்திற்கும் இந்த எதிரிக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. பொய்யான சங்கதிகள் கூறி எதிரிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் சாட்சியத்தில் தெரிவித்தது போல் எதிரி எந்த சந்தர்ப்பத்திலும் உங்கள் வீட்டிற்கு வந்ததும் இல்லை, வேறு எந்த பகுதியிலும் உங்களை சந்தித்ததும் இல்லை உங்கள் வீட்டில் எந்த தொகையும் பெற்றதும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

வள்ளியூர் சுற்றுபுறத்தில் பண மோசடியதாகவும், நிலம் வாங்கி தருவதாக மோசடி செய்ததாகவும் வள்ளியூர் காவல்நிலையத்தில் உங்கள் மீது மோசடி புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் கொடுக்கபடவில்லை. தளபதிசமுத்திரம் ஊரில் உங்கள் உறவினர் மற்றும் பிற சமூகத்தினரிடம் அச்சுறித்தி பணம் பறித்ததாகவும் புகார் கொடுக்கப்பட்டது என்றால் இல்லை. நீங்கள் மரியகலா, சேவியர் தூண்டுதலின் பெயரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. காசோலையில் கையெழுத்து முரண்பாடு இருந்தால் மாற்றுமுறை ஆவணம் சட்டம் பிரிவு 138 ன் படி வழக்கு தாக்கல் செய்ய முடியாது என்று சொன்னால் சரியல்ல. எதிரி வங்கியில் மாதிரி கையெழுத்தை ஆங்கிலத்தில் போட்டு கொடுத்திருந்தார் என்றும் ம.சா.ஆ.1 காசோலையில் தமிழில் கையெழுத்து போடப்பட்டுள்ளது என்று ம.சா.ஆ.2 ல் குறிப்பிட்டு தெரிவிக்கவில்லை என்றால் சரிதான்.